பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி சென்னை – 4

03 08 2025 SUNDAY 7.15 PM

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை இன்று நேரில் சந்தித்து பேசினார்.

- நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் 172 இடங்களில் ஹைட்ரோ கார்பன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- ஆந்திராவில் உள்ள கிரானைட் குவாரி ஒன்றில் இன்று நேரிட்ட விபத்தில் ஆறு தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

- ரஷ்யாவின் Kuril தீவுகளில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது ஆறு புள்ளி எட்டாக பதிவானது.

- பிரேஸிலில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar - Manush Sha** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

- இனி விரிவான செய்திகள் –

<<<<<<<<>>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை இன்று சந்தித்துப் பேசினார்.

நடப்பு அரசியல் விவகாரங்கள் குறித்து பிரதமர் இந்த சந்திப்பின்போது விவாதித்தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்குவதன் மூலமாக விவசாயிகள், சுயஉதவிக்குழுக்கள், சிறு-குறு தொழில்முனைவோரின் வருவாய் அதிகரிக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

தமது சமூக வலைதள பக்கத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வாரணாசியில், பிரதமரின் வருவாய் ஆதரவுத் திட்டத்திற்கான 20-ஆவது தவணைத் தொகையை விடுவித்ததாகவும், அப்போது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பொருட்களை மக்கள் வாங்க வேண்டும் என்று வலியுறுத்தியதாகவும் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

குடிமக்கள் ஒவ்வொருவரும் நாட்டு நலனை பிரதானமாக கொள்ள வேண்டும் என்றும், திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் 172 இடங்களில் ஹைட்ரோ கார்பன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

தமது சமூக வலைதள பக்கத்தில் இதனை குறிப்பிட்டுள்ள அவர், ஆய்வு சாத்தியமில்லை என்று கருதப்பட்ட பகுதிகளிலும், ஹைட்ரோ கார்பன் கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இதன்மூலமாக, இதுவரை கடல்பரப்பில் 62 இடங்களில் ஹைட்ரோ கார்பன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, பெட்ரோலியத்துறையில் மேற்கொண்டுவரும் துணிச்சலான நடவடிக்கைகளும், கொள்கை முடிவுகளுமே இதற்கு காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஹைட்ரோ கார்பன் கண்டுபிடிப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க இந்நடவடிக்கை உறுதுணையாக இருக்கும் என்று திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

நாட்டின் முதலாவது புல்லட் ரயில் சேவை வெகு விரைவில் தொடங்கப்படும் என்று ரயில்வேத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் பாவ்நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர், காணொலி வாயிலாக மூன்று ரயில் சேவைகளை தொடங்கிவைத்தார்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், மும்பை – அகமதாபாத் இடையே நாட்டின் முதலாவது புல்லட் ரயில் சேவை வெகு விரைவில் தொடங்கப்படும் என்றும், இந்த ரயில் மணிக்கு 320 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கும் என்றும் தெரிவித்தார்.

இதன்மூலம் அவ்வழித்தடத்தில் பயணிப்பதற்கான நேரம் இரண்டு மணிநேரம் ஏழு நிமிடங்களாக குறையும் என்றும் அவர் கூறினார்.

நவீன தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள வந்தேபாரத், அம்ரித் பாரத், நமோ பாரத் ரயில் சேவைகளை பயணிகள் அதிகம் விரும்புவதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் Gonda பகுதியில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இவ்விபத்தில் காயமடைந்தோர் விரைவில் குணமடைய தாம் பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இவ்விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும், காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

ஆந்திராவில் Bapatla மாவட்டத்தில் உள்ள கிரானைட் குவாரி ஒன்றில் இன்று நேரிட்ட விபத்தில் ஆறு தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்தனர்.

Ballikurava என்ற இடத்தில் உள்ள இந்த குவாரியில், இன்று காலை பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது பாறை விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்தோர் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தில்சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த அம்மாநில முதலமைச்சர் திரு என் சந்திரபாபு நாயுடு, காயமடைந்தோருக்கு தகுந்த சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யுமாறு உத்தரவிட்டார்.

இந்த விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் ஒடிஷாவை சேர்ந்தவர்கள் என்றும், இவ்விபத்து குறித்து விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

நாடு முழுவதும் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

அதன் ஒருபகுதியாக, பிரதமரின் வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தில், இத்திட்டமானது விவசாயிகளுக்கு பயன் அளித்து வருவதாக விவசாயி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte - தண்டபாணி – 22 Sec.)*

<<<<<>>>>>>

ரஷ்யாவின் Kuril தீவுகளில் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது ஆறு புள்ளி எட்டாக பதிவானது.

இதையடுத்து, அங்குள்ள Kamchatka பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், ஹவாய் பகுதிக்கு சுனாமி அச்சுறுத்தல் ஏதுவும் இல்லை என்று பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்திற்கு சற்றுமுன், ரஷ்யாவின் Kamchatka பகுதியில் உள்ள எரிமலை ஒன்று 600 ஆண்டுகளுக்கு பிறகு வெடித்து சிதறியது.

இந்த இரு நிகழ்வுகள் குறித்து புவியியல் நிபுணர்கள் ஆராய்ந்து வருவதாக அங்குள்ள செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

<<<<<>>>>>>

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, சிக்கிம் மற்றும் மேற்குவங்கத்தின் இமயமலை அடிவாரப்பகுதிகளில் உள்ள ஒரு சில இடங்களில் இன்று மிக அதிக அளவில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், குஜராத், உத்தரகண்ட் பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா மற்றும் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் வரும் ஐந்தாம் தேதியன்று அதிக அளவில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இன்று முதல் வரும் 7-ஆம் தேதிவரை தமிழகம், கேரளா, மாஹே, கர்நாடகாவின் தெற்கு உட்புறப்பகுதி, கடலோர ஆந்திரப்பிரதேசம், யாணாம், ராயலசீமாவின் ஒரு சில

பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>>

சீனாவின் தென்பகுதியில் உள்ள குவாங்டாங் மாகாணத்தில் இன்று முதல் வரும் ஐந்தாம் தேதிவரை இயல்புக்கு மாறாக அதிக அளவில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதையடுத்து, அங்குள்ள கடலோர நகரங்கள் மற்றும் முத்து நதி கரையோரப்பகுதிகளில் வாழும் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வருகிறது.

மக்கள் பாதுகாப்பாகவும், முன்னெச்சரிக்கையாகவும் இருக்குமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதற்கிடையே, தென்கொரியாவிலும் அடுத்த மூன்று நாட்களுக்கு 15 சென்டிமீட்டருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, அந்நாட்டின் தெற்கு மற்றும் மத்தியப்பகுதிகளில் அதிகனமழையை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பிரேஸிலில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manav Thakkar - Manush Sha இணை வெள்ளிப்பதக்கம் பெற்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் ஜெர்மனியின் Benedikt Duda – Dang Qiu இணை 11-3, 7-11, 11-7, 13-15, 11-5 என்ற செட் கணக்கில், இந்திய இணையை வென்றது.

<<<<<>>>>>>

17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sitender இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

கிரீஸின் ஏதென்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், கஜகஸ்தானின் Bekassyl Assambek -ஐ வென்றார்.

<<<<<>>>>>>

ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Avni Janghu வெண்கலப்பதக்கம் வென்றார்.

11 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<>>>>>>

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் தொடக்க சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Harsh வெற்றிபெற்றார்.

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் அவர், சீனாவின் Jiabao Yuan -ஐ வென்றார்.

<<<<<>>>>>>

இந்தியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று 374 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்சை ஆடிவரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 3 விக்கெட் இழப்பிற்கு 239 ரன் எடுத்துள்ளது.

**<<<<<END>>>>>>**